# காளையார்கோவில் வட்டார நாட்டுப்புறத் திருவிழாக்கள்

**க. விஜயகுமார்**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்சி**

### முன்னுரை

'விழா என்னும் திறந்த வாசல் வழியேதான் நம் நாட்டு மக்களை அறிந்துகொள்ள முடியும்'
**- தாகூர்**

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும், அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். ஆண்டு முழுவதும் உழைத்த மனிதன் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவது இயல்பு. தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் திருவிழாக்கள் நடைபெற்று வருவதை அறிகிறோம். சமுதாய மாற்றத்தால் புதிய திருவிழாக்களும் தோன்றுகின்றன. இவ்விழாக்கள் மூலம் கலையும் கலையனுபவமும் மேலோங்கி வளர்கின்றன. கலைகளின் வளர்ச்சிக்கே திருவிழாதான் மூலகாரணமெனின் மிகையாகாது. திருவிழாக்கள் அனைத்தும் கோயிலுடன் பின்னிப் பிணைந்துள்ளன. கோயில் என்றாலே திருவிழா, திருவிழா என்றாலே கோயில் விழாக்கள். சமயத்தின் கூறாக மட்டுமின்றி கலைகளின் வளர்ப்புப் பண்ணையாகவும் திகழ்கின்றன. திருவிழாக்கள் பண்பாட்டு உறவை வளர்க்கவும் ஒருமைப் பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. காளையார்கோவில் வட்டாரத்தில் நடைபெறும் முக்கிய திருவிழாக்களைக் காண்போம்.

### பொன்னேர் கட்டுதல்

வருடத்தின் முதல் நாளான சித்திரை திங்களன்று காளையார்கோவில் வட்டாரத்தில் பொன்னேர்கட்டுதல் எனும் விழா வெகு சிறப்பான முறையில் நடைபெறும். அன்றையதினம் அதிகாலையில் குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து விதைநெல், மாட்டு எரு, நிறை செம்பு நீர், மங்களப்பொருட்களுடன் சூரியன் உதிப்பதற்கு முன் வயல்;களுக்குச் சென்று ஏர் கலப்பை கொண்டு வயலை உழுது குடும்பத்தின் பெயரியவர் விதை தூவி இறுதியில் நிறை செம்பு நீரை நெல்லில் தெளித்து வயலை வணங்குவர். அவ்வாறு சென்று வணங்கி வீட்டிற்கு வருவதற்குள் தன் கண் எதிர் நடக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் வைத்து அவ்வருடம் நன்கு விளையும் அல்லது விளையாது சகுணம் பார்ப்பது இன்றைய சூழ்நிலையில் நடைமுறையில் உள்ளது. இன்றைய அறிவியல் உலகில் இது வியக்கத்தக்கதாக உள்ளது.

அழகர் ஆற்றிலிறங்கும் நிகழ்ச்சி சித்திரா பௌர்ணமியன்று நடைபெறும். அன்றைய தினம் காளையார்கோவில் வட்டாரமெங்கும் அழகர் வருகின்ற பாதமும், அழகர் செல்கின்ற பாதமும் மாக்கோலத்தால் வரையப்பட்டு வீடுகள்தோறும் கொழுக்கட்டை அவியல் செய்து இறைவனுக்குப் படைக்கப்பட்டு வணங்கும் நிகழ்ச்சி காளையார்கோவில் வட்டாரத்தில் இன்றளவும் காணமுடிகிறது.

**வைகாசி விசாகப்பெருவிழா**

வைகாசி மாதம் விசாக நாளில் காளையார்கோவிலிலுள்ள சொர்ண காளீஸ்வரருக்கு பத்து நாள் திருவிழா சிறப்பாக நடைபெறும். அத்திருவிழாயில் சிறப்பு மிக்கது தேரோட்டமும், பத்தாம் நாள் நடைபெறும் தெப்பத் திருவிழாவும், இத்திருவிழா காலங்களில் காளையார்கோவில் வட்டாரமே களை கட்டியிருக்கும். விழாவின் முக்கிய திருவிழா அன்று மூலவர் இறைவியுடன் தெப்பத்தில் வளம் வரும் காட்சி காளையார்கோவில் வட்டார மக்கள் அனைவரும் தெப்பத்தைச் சுற்றி நின்று இறைவனை பலத்த கோசத்துடன் வணங்குவர்.

தெப்பத்திருவிழாவிற்கு முதல் நாள் வெள்ளோட்டம் நடைபெறும். அன்றைய தினம் இறைவன் மூன்று முறை தெப்பத்தை வளம் வந்து மைய மண்டபத்தில் உள்ள ஊஞ்சலில் இறைவனுக்கும், இறைவிக்கும் தாலாட்டு நடைபெறும்.

**நாட்டரசன்கோட்டை வெள்ளி ரதம்**

வைகாசி விசாக நாளில் நாட்டரசன்கோட்டை கண்ணுடைய நாயகிய அம்மனுக்கு எட்டு நாள் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். அத்திருவிழாக்களில் சிறப்புடையது எட்டாம் நாள் நடைபெறும் வெள்ளி ரதம் விழா சிறப்பு மிக்கதாகும். அம்மன் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி ரதம் விழா சிறப்பு மிக்கதாகும். அம்மன் அலங்கரிக்கப்பட்ட வெள்ளி ரதத்தில் மின்னொளி அலங்காரத்தில் தேரோடும் வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி தருவார். இத்திருவிழாவிற்கு சென்று வருபவர்கள் பலாப்பழம் மற்றும் பனை ஓலையில் செய்யப்பட்ட பெட்டி மற்றும் பொருட்களை வாங்கி வருவது பாரம்பரிய மரபாக வைத்துள்ளனர்.

**கண்டுபட்டி பூத்திருவிழா**

வருடம்தோறும் ஆனி மாதம் கண்டுப்பட்டி சேகரம் குடியிருப்பு காளியம்மனுக்கு அம்மனுக்கு உகந்த நாளில் பூத்திருவிழா நடைபெறும். அன்றைய தினம் கண்டுப்பட்டி மட்டும் அருகிலுள்ள கிராம மக்கள் வண்ணப் பூத்தட்டுகளுடன் பறவைக்காவடி முன் செல்ல அக்கினிச்சட்டி பின் செல்ல அதனைத் தொடர்ந்து பெண்கள் பூத்தட்டுக்களுடன் அம்மனின் பெயரைச் சொல்லி சாமி ஆட்டத்துடன் கோவிலுக்குச் சென்று வணங்குவர்.

**செவல்புஞ்சை தீ மிதித்திருவிழா**

வருடம்தோறும் ஆனித் திங்கள் மூன்றாவது செவ்வாய் அன்று பூ வளர்க்கப்பட்டு அதாவது கிராம வழக்கப்படி அம்மன் வாசலில் பூ என்பது நெருப்பைக் குறிக்கும். ஒவ்வொரு வருடமும் இக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் தாங்கள் நினைத்தது நடக்க அம்மனை வேண்டுவர். அவ்வாறு நடந்தால் மறுவருடம் அம்மன்கோவில் முன்பு நடத்தப்படும் தீமித்திருவிழாவில் தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை நிறைவு செய்வர். சிறுவர் முதல் பெரியவர் வரை சாமி ஆட்டத்துடன் செவல்புஞ்சை கிராமத்தை வலம் வந்து ஒருவர்பின் ஒருவராக தீ மிதித்து அம்மனை வணங்குவர்.

**ஆடித்திருவிழா**

தமிழகமெங்கும் அம்மனுக்கு விழா நடத்த உகந்த மாதம் ஆடி மாதம் என்று முன்னோர் கூறுவர். முன்னோர்கள் கடைபிடித்த பாரம்பரியம் மாறாமல் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் அம்மனுக்கு எல்லா வட்டாரங்களிலும் திருவிழா நடைபெறும். அதைப் போன்று

காளையார்கோவில் வட்டாரத்தில் வெகு விமர்சையாக திருவிழாக்கள் நடைபெறும். அவ்விழாக்களில் குறிப்பிட்ட விழாவாக முளைப்பாரி விழா, மதுக்குடம் எடுத்தல் விழா, திருக்கரக பெருவிழா, ஆடி உற்சவ விழா, கூழ் ஊற்றுதல் விழா, ஆடிப்பொங்கல் விழா போன்ற விழாக்கள் குறிப்பிடத்தக்கதாகும். இவ்விழாக்கள் காளையார்கோவில் வட்டாரமான காளையார்கோவில், முத்தூர், கொல்லங்குடி, நாட்டரசன்கோட்டை, காட்டாத்தி, விட்டனேரி, நற்புதம், சானாஊரணி, ஆண்டிச்சியூரணி, கண்டனிப்பட்டி, வெற்றியூர், அரண்மனை சிறுவயல், காளக்கண்மாய், கீரனூர், அழகாபுரி, உடைவயல் போன்ற கிராமங்களில் சிறப்பாக நடைபெறும்.

**ஆடிப்பெருக்கு விழா**

காவிரி பாயும் தமிழகத்தில் கொண்டாடப்படும் முக்கியவிழா ஆடிப்பெருக்கு விழாவாகும். அன்றைய தினம் புதுமணத்தம்பதியர் காவிரியில் நீராடி புத்தாடை அணிந்து காவிரியை வணங்குவர். தமிழக மக்கள் காவிரித்தாயை நெய் விளக்கேற்றி வரவேற்பர். சுமங்கலிப்பெண்கள் காவிரியில் நீராடி தாங்கள் கழுத்தில் அணிந்துள்ள மங்கள நாணை மாற்றி என்றும் தீர்க்க சுமங்கலியாக இருக்க காவிரித்தாயை வணங்குவர். அதுபோன்று காளையார்கோவில் வட்டார மக்கள் தங்களுக்கு அருகிலுள்ள நீர் நிலைகளுக்கு சென்று சுமங்கலிப் பெண்கள் வணங்குவர். ஆடிப்பதினெட்டாம் தேதியை ஆடிப்பெருக்கு என்றழைப்பர். அன்றைய தினம் காளையார்கோவில் வட்டாரம் கொல்லங்குடியில் அமைந்திருக்கும் பொய்சொல்லா மெய் அய்யனார் கோவிலுக்கு வருடம்தோறும் புரவி எடுப்புவிழா நடைபெறும். அன்றையதினம் மஞ்சுவிரட்டு விழாவும் நடைபெறும்.

‘ஆடிப்பட்டம் தேடி விதை” என்ற பழமொழிக்கேற்ப ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று விதை விதைத்தால் நெற்பல விளையும் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் இன்றளவும் நடைமுறையில் இருக்கிறது. மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும் ஆடிப் பெருக்கன்று விதை விதைக்கின்றனர்.

**திருக்கார்த்திகை திருவிழா**

முருகப்பெருமானை வணங்கும்விதமாக வருடம்தோறும் கார்த்திகைத் திருநாளன்று காளையார்கோவில் வட்டாரத்தில் திருக்கார்த்திகைத் திருவிழா சொக்கப்பன் கொளுத்துதல் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. திருவண்ணாமலையில் ஏற்றப்படும் மகா தீபத்தை அடிப்படையாக வைத்து கார்த்திகை திருநாளன்று மாலை இல்லங்கள்தோறும் தீப விளக்கேற்றி வாழ்க்கையில் இருள் விலகி ஒளி பெறவும், தீமை நீங்கி நன்மை பெறவும் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இவ்வட்டாரத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கோவிலின் முன்பாகப் பனைமரத்து ஓலையால் சொக்கப்பன் கட்டப்படும். கார்த்திகை நாளன்று மாலை ஏழு மணி அளவில் கிராம மக்கள் ஒன்று கூடி மேளதாளத்துடன் கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கி பின்பு கோவில் பூசாரி தீப்பந்தத்துடன் சொக்கப்பானை நெருங்குவர். அப்பொழுது சிறுவர்கள் பணம் பூவால் செய்யப்பட்ட மாவளி சுற்றுவர். பூசாரி சொக்கப்பனை மூன்று முறை வலம் வந்து சொக்கப்பனுக்கு உள் நுழைந்து நடுவில் உள்ள கழுமரத்தில் தீப்பந்தத்தை வைத்துக் கட்டி கீழ்க்கண்ட வாசகத்தை கூறுவர்.

**“மாவளி மாவளி மகா மாவளி**
**ஊரு விளைய உள்ளமழை பேய**
**நாடு விளைய நல்லமழை பேய”**

என்று கூறி தீப்பந்தத்தை வடக்கு நோக்கி வீசுவர். அப்பூசாரி சொக்கப்பனை விட்டு இறங்கிய பின்பு சொக்கப்பனுக்கு தீ மூட்டப்படும். சொக்கப்பன் எரிந்த பின்பு அதிலுள்ள கம்புகளைப் பிடுங்கி எடுக்க மக்கள் போட்டி போடுவர். ஏனெனில் அக்கம்பை வயலில் நட்டால் நெற்கதிர்கள் நன்றாக விளையும் என்பது இவ்வட்டார மக்களின் நம்பிக்கையாகும்.

**தைப்பொங்கல்**

“தைப்பிறந்தால் வழி பிறக்கும்” என்பது பொன்மொழி. தைத்திங்கள் முதல் நாளன்று காளையார்கோவில் வட்டாரத்தில் ஒருசில கிராமத்தில் குறிப்பாக முத்தூர் கிராமத்தில் திருவிளக்கு பூஜை நடைபெறும். பெண்கள் குத்துவிளக்கேற்றி கதிரவனை வணங்குவர். அன்றைய தினம் தமிழகமெங்கும் பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும். அதைப்போன்று காளையார்கோவில் வட்டாரத்திலும் பொங்கல் சிறப்பாக நடைபெறும்.

**மாட்டுப்பொங்கல்**

காளையார்கோவில் வட்டாரமே களைகட்டும் பொங்கல் மாட்டுப் பொங்கல் ஆகும். இப்பொங்கலுக்கென்று தனிப்பட்ட சந்தையே காளையார்கோவிலில் கூடும். இவ்வட்டாரத்தில் கிராமங்கள்தோறும் மா இலை தோரணங்களால் வீதியெங்கும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மாடுகள் கட்டப்படும் இடங்களைப் புது மண்ணால் முழுகி வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டு வீடுகள் அலங்கரிக்கப்படும். பொங்கல் வைக்கும் இடத்திற்கு முன்னால் விளாரிமாறால் தெத்துகட்டப்படும். காலங்கள் மாறினாலும் மக்களின் பாரம்பரியம் மாறுதல் இல்லை என்ற கூற்றிற்கேற்ப மாட்டுப் பொங்கலன்று புதுப்பானையில் பொங்கல் வைப்பதற்கு பெண்கள் தண்ணீர் குடம் எடுத்து செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவரவர் வீட்டின் முன்பு அல்லது கோவிலின் முன்பாகப் பங்காளிகள், உறவினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வரிசையாக பொங்கல் வைத்துக் குலவையிட்டு மகிழ்வர். பொங்கல் வைத்து முடிந்த பின்பு புறமடை தண்ணீர் எடுக்க சிறுவர்கள் செல்வர். கண்மாய்க்கு பின் உள்ள மடையில் நீர் எடுத்து அதில் மா இலை, நெற்கதிர் வைத்துக் கிராமத்திலுள்ள பெயரிவர்களிடம் சென்று அந்த நீர் மந்திரம் சொல்லி ஓதப்படும். பின்பு அந்நீர் பொங்கல் வைத்த இடத்தில் உரலில் வைக்கப்படும்.

அன்றைய தினம் மாடுகள் குளிப்பாட்டப்பட்டு மஞ்சள் வைத்து, பொட்டு வைத்து, துண்டு கட்டி பொங்கல் வைத்திருக்கும் தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும். மாட்டுப் பொங்கலன்று பிற்பகல் நல்ல நேரதில் திருஷ்டி சுத்துதல் என்ற சடங்கு நடைபெறும். அவரவர் உறவினர் ஒன்று கூடி பெரிய மரக்காலில் புறமடை புனித நீர் ஊற்றப்பட்டு பின்வரும் பாடல் கூறப்படும்.

**“பொங்கலோ பொங்கல் சங்கராம் பொங்கல்**
**பட்டிப்பலுக பால்பானை பொங்க**
**பொங்கலோ பொங்கல் சங்கராம் பொங்கல்**
**பட்டிப்பலுக பால்பானை பொங்க**
**ஸ்ரீதேவி நிண்டு விளங்க மூதேவி முறிஞ்சோட**
**பொங்கலோ பொங்கல் சங்கராம் பொங்கல்”**

என்ற பாடல் பலத்த சப்தத்துடன் ஒலிக்கப்படும். பின்பு மாடுகள் கட்டியிருக்கும் தொழுவத்திற்கு முன்பு சதுரமாக தெப்பம் வெட்டப்படும். அதில் கல்லியன்தட்டை இடப்பட்டு நெருப்பு எரிந்துகொண்டிருக்கும். ஊர் மக்கள் அனைவரும் நல்ல நேரத்தில் செல்வர். நல்ல நேரத்தில் பூசாரி மாட்டிற்கு தீபம் காண்பித்து மாட்டை தப்பாட்டத்துடன் ஊரின் முதல் மாடான அரண்மனை வீட்டு மாடு திறக்கப்படும். பின்பு ஒவ்வொரு வீடாக சென்று சாமி ஆட்டத்துடன் சென்று சாமி அருவாள் மீது ஏறி மாடு திறக்க உத்தரவு கொடுத்தபின்பு மாடுகள் அவிழ்த்துவிடப்படும். இவ்வாறு மாட்டுப் பொங்கலன்று மாலை ஐந்து மணிவரை இந்நிகழ்ச்சி நடைபெறும். பின்பு மாலை இளைஞர்கள் அவர்கள் அழகான குப்பி சொம்புகளில் அலங்கரித்து பருவமடையாத சிறுமியர்கள் தலையில் வைத்து அழகாக நடந்து சவுக்கைக்கு வருவர். அங்கு இரவு கும்மி கொட்டப்படும். பின்பு வரிசையாக சென்று விநாயகர் கோவிலில் வைத்து சாமிகும்பிட்ட பின்பு ஊரணியில் குப்பி கொட்டப்படும். ஊரணியில் இருந்து நிறை செம்பு நீர் எடுத்து கொண்டுவந்து சவுக்கையில் ஊற்ற பொங்கல் விழாவானது இனிதே நிறைவு பெறும்.

**செவ்வாய் பொங்கல் விழா**

நாட்டரசன்கோட்டையில் தைப்பொங்கல் முடிந்த முதல் செவ்வாய்க் கிழமையன்று மாலை கண்ணுடைய நாயகி அம்மன் கோவில் முன்பு நாட்டரசன்கோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார கிராம மக்கள் ஒன்று கூடி ஒரே நேரத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொங்கல் பானை வைத்து செவ்வாய் பொங்கல் கொண்டாடுவது இன்றளவும் நடைமுறை வழக்கமாக உள்ளது.

**மத நல்லிணக்க விழா**

தமிழர்களின் வீர விளையாட்டுக்களில் ஒன்றான சல்லிகட்டுப் பற்றி சங்க இலக்கிய நூலான கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. சல்லிக்கட்டு என்பது பெரும்பாலும் தமிழகத்தில் இந்துக்கள் மட்டுமே கொண்டாடும் விழாவாக நடைமுறையில் இருக்கிறது. காளையார்கோவில் வட்டாரம் கண்டுப்பட்டி கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் ஐந்தாம் நாள் புனித அந்தோணியாருக்குப் பொங்கல் வைத்து மஞ்சுவிரட்டு நடைபெறும் அலங்காநல்லூர், பாலமேடு, சிராவயல் சல்லிக்கட்டு. அதற்கு அடுத்தாகப் புகழ்பெற்று விளங்குவது கண்டுப்பட்டி சல்லிக்கட்டாகும்.

**சிறப்பு**

சல்லிக்கட்டை காணவரும் மக்களைக் கூவி அழைத்து உணவளிக்கும் முறை தமிழரின் வரவேற்பு உபசரிபிற்கு எடுத்துக்காட்டாக கிறிஸ்தவ கோவிலுக்கு கண்டுப்பட்டி சுற்று வட்டார கிராம மக்கள் (இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம்) ஒன்று சேர்ந்து மத நல்லிணக்க விழாவாக ஒற்றுமையுடன் ஆண்டாண்டு காலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**மாசி களரி**

காளையார்கோவில் வட்டாரத்தில் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரி அன்று குலதெய்வ வழிபாடு சிறப்பு மிக்கதாகும். அன்றைய தினம் இவ்வட்டார மக்கள் அவரவர் குலதெய்வ கோவிலுக்கு சென்று பச்சைப்பயிறுகள் மற்றும் நவதானியங்கள் பரப்பி நெல்லில் இடிக்கப்பட்ட அவல் படைத்து வழிபாடு செய்வர். பின்பு கிடாய் வெட்டுதல்,

கருப்பனசுவாமிக்குப் படையல் போடுதல், பாரி வேட்டைக்குச் செல்லுதல், பால்குடம் எடுத்தல். காவடி எடுத்தல் போன்ற திருவிழாக்கள் இவ்வட்டாரத்தில் மாசி மாதம் நடைபெறும் களரி திருவிழாவாகும்.

**பங்குனி சுவாதி பெருவிழா**

கொல்லங்குடியில் அரியாக்குறிச்சி கிராமத்தில் அமைந்திருக்கும் வெட்டுடையாள் காளியம்மனுக்கு பங்குனி சுவாதி நட்சத்திர நாளில் பெருவிழா பத்து நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் மண்டகப்படி ஒதுக்கப்பட்டு அவர்கள் விழா நடத்துவர். திருவிழா நாட்களில் அம்மன் ஒவ்வொரு வாகனத்திலும் எழுந்தருளியும் பத்தாம் நாள் பூப்பல்லாக்கில் வளம் வந்து தீர்த்த வாரியுடன் விழா இனிதே நிறைவுபெறும்.

காளையார்கோவில் வட்டார மக்கள் பங்குனி 22ம் நாள் தாயமங்கலம் முத்துமாரியம்மனுக்கு கோவில் இருக்கும் திசையை நோக்கி வயல் வெளிகளில் பொங்கல் வைத்து கோழி மற்றும் சேவல் பலியிட்டு வணங்குகின்ற மரபு காளையார்கோவில் வட்டாரத்தில் மட்டும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**முடிவுரை**

விழாக்கள் பெரும்பாலும் மதச் சார்புடையனவாகவோ தொழில் சார்புடையனவாகவோ இருக்கும். தொழில் சார்புடைய விழாக்கள் தொழில் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணத்தில் கொண்டாடப்படுவன. சமயச் சார்புடைய விழாக்களில் தெய்வ வழிபாடு கலந்திருக்கும். பொழுதுபோக்காக மட்டுமின்றிப் பயன்கருதியும் நடத்தப்படுகின்றன. நாட்டுப்புற விழாக்கள் மூலம் நாட்டுப்புற மக்களின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் நாகரிகமும் வெளிப்படுகின்றன.